முதன்மை சார்பு நீதிமன்றம்**,** திண்டிவனம்
முன்னிலை **:** திரு**.G.**கிறிஸ்டியன்**.** எம்**.**ஏ**.,** எம்**.**எல்**.,**
முதன்மை சார்பு நீதிபதி**,** திண்டிவனம்
**2026-**ஆம் ஆண்டு ஜுலை திங்கள் **10-**ம் நாள் வெள்ளிக்கிழமை
அசல் வழக்கு எண்**.67/2022**
**CNR No.TNVP0E-000-088/2022**

கலைவாணி. ... வாதி.

// எதிர் //

ஏழுமலை. ... பிரதிவாதி.

இவ்வழக்கு இன்று 17.04.2026-ல் என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகததால் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

தீர்ப்புரை

இவ்வழக்கானது, தாவா சொத்து வாதிகளுக்கு உரிமையானது என விளம்புகை செய்யவும், வழக்கு சொத்தில் பிரதிவாதி எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யாமலிருக்க பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு பிறப்பிக்கவும் மற்றும் செலவு தொகைக்கும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்

2.1) வழக்கு சொத்து விபரத்தில் விவரிக்கப்பட்டுள்ள சொத்து திண்டிவனம் வட்டம், சின்னநெற்குணம் கிராமத்தை சார்ந்த ஏழுமலை மனைவி அலமேலு என்பவருக்கு உரிமையும் அனுபவமுமான சொத்தாகும. மேற்படி வழக்கு சொத்தை அலமேலு என்பவர் கடந்த 01.09.2017 தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்றார். அந்த கிரைய ஆவணம் மயிலம் சார்பதிவகத்தில் ஆவண எண். 1203/1997-ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அலமேலு கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தை ஆவணத்தின் சான்றிட்ட நகல் இந்த வழக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

2.2) வழக்கு சொத்தை கிரையம் பெற்ற அலமேலு தொடர்ந்து ஆண்டு அனுபவித்து கொண்டும், அரசுக்கு செலுத்த வேண்டிய தீர்வைகளை செலுத்தி

அனுபவித்து வரப்பட்ட சொத்தாகும். மேற்படி அலமேலு வழக்கு சொத்தை பொருத்து இந்த வாதிக்கு கடந்த 06.08.2019 தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட மதிப்பிடாத உயில்சாசனம் எழுதி மேற்படி வாதிக்கு பாத்தியப்படுத்தியுள்ளார். அந்த ஆவணம் மயிலம் சார்பதிவகத்தில் ஆவண எண். 20/2019-ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உயில் சாசனம் இறுதியான ஆவணம் என்று கூறியுள்ளார்.

2.3) வழக்கு சொத்தை அலமேலு அனுபவித்து வந்து வழக்கு சொத்து கிராமமான சின்னநெற்குணம் கிராமத்தில் கடந்த 02.05.2020 தேதியில் காலமாகிவிட்டார். மேற்படி அலமேலு இறப்பு சான்றிதழ் இந்த வழக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அலமேலு இறப்பதற்கு முன்பு வாதிக்கு எழுதி வைத்த உயில்சாசன வாசகபடி வாதி, வழக்கு சொத்தை கைப்பற்றி அடைந்து தொடர்ந்து ஆண்டு அனுபவித்து வருகிறார். இந்த விபரம் ஊரில் உள்ள அனைவருக்கும் நன்கு தெரியும் என்று கூறியுள்ளார்.

2.4) வழக்கு சொத்தில் வாதியை தவிர வேறு யாருக்கும் எவ்வித உரிமையும் கிடையாது. அப்படி இருக்கும்போது இந்த பிரதிவாதி இறந்த அலமேலுவின் உறவினர் என்பதால் வழக்கு சொத்தில் உரிமை இருப்பதாக கூறி தடையும், இடைஞ்சலும் செய்ய முற்பட்டார். இந்த வாதி கடந்த 2021-ம் ஆண்டு டிசம்பர் இறுதிவாரத்தில் உறவினர்கள் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் முன்னிலையில் இந்த பிரதிவாதியிடம் உயில்சாசனம் எழுதிவைத்துள்ள ஆவணத்தையும் காண்பித்துள்ளார். பிரதிவாதி உண்மைநிலை தெரிந்தும் தொடர்ந்து வழக்கு சொத்தின் அனுபவத்தை தடையும், இடைஞ்சலும் செய்கிறார் என்றும், ஆகையால் வாதி வழக்கில், வழக்கு சொத்து வாதிக்கு உரிமையும், அனுபவமுமானது என விளம்புகை செய்யும்படிக்கும், வாதி வழக்கு சொத்தை அமைதியான முறையில் ஆண்டு அனுபவித்து வருவதை இந்த பிரதிவாதி எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யாமல் இருக்க நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி இநத் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார்.

3. பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் ஆஜராகததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

4. வாதி தரப்பில் வாதி கலைவாணி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ 1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதி

தரப்பில் ராமு என்பவர் வா.சா.2-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இத்துடன் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் தோன்றாத்தரப்பினர்கள் என்பதால், சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், வழக்கு சொத்து சின்னநெற்குணம் கிராமத்தை சேர்ந்த ஏழுமலை மனைவி அலமேலு என்பவருக்கு உரிமையும் அனுபவமுமமான சொத்து என்றும், மேற்படி வழக்கு சொத்தை அலமேலு என்பவர் கடந்த 01.09.2017 தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்றார் என்றும், அந்த கிரைய ஆவணம் மயிலம் சார்பதிவகத்தில் ஆவண எண். 1203/1997-ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அலமேலு இந்த வழக்கு சொத்தை வாதிக்கு கடந்த 06.08.2019 தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட மதிப்பிடாத உயில்சாசனம் எழுதி மேற்படி வாதிக்கு பாத்தியப்படுத்தியுள்ளார் என்றும், அந்த ஆவணம் மயிலம் சார்பதிவகத்தில் ஆவண எண். 20/2019-ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அலமேலு கடந்த 02.05.2020 தேதியில் காலமாகிவிட்டார் என்றும், உயில்சாசன வாசகபடி வாதி இந்த வழக்கு சொத்தை கைப்பற்றி அடைந்து தொடர்ந்து அனுபவித்து வருகிறார் என்றும், பிரதிவாதி இறந்த அலமேலுவின் உறவினர் என்பதால் வழக்கு சொத்தில் உரிமை இருப்பதாக கூறி தடையும் இடைஞ்சலும் செயதுவருகிறார்கள் என்றும், வாதி அவரது தரப்பினை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்துள்ளதாகவும், எனவே தாவாப்படி தீர்ப்பாகுமாறும் வாதிட்டார்.

6. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இவ்ழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதாகும்.

**7.** <u>தீர்வு</u>

வாதி இந்த வழக்கை வழக்கு சொத்துக்கு தான் உரிமையாளர் என்று விளம்புகை செய்யவேண்டுமென்றும், பிரதிவாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

8. வழக்கு சொத்தானது ஆதியில் அலமேலுக்கு பாத்தியமான சொத்தாகும். அவர் வழக்கு சொத்தை 01.09.1997 அன்று பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் வாங்கியுள்ளார். அலமேலுவினுடைய அண்ணன் வாசுதேவன் ஆவார். அவருடைய மகள் தான் இந்த வழக்கின் வாதி ஆவார். சொத்தின் உரிமையாளரான அலமேலு, சொத்தின் உரிமையை அவருடைய அண்ணன் மகளான வாதிக்கு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின்படி உரிமை மாற்றம் செய்துள்ளார். பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின்படி வாதி உரிமையாளர் ஆகிறார். உயில் எழுதி வைத்த அலமேலு அந்த ஆவணத்தில் தன்னுடைய அண்ணன் மகள் வாதிக்கு இந்த உயிலின்படி சொத்தின் உரிமையை மாற்றுவதாக கூறியுள்ளார். உயில் ஆவணம் வா.சா.ஆ-1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1-ல் உயில் ஆவணத்திற்கு முன் ஆவணமாக 01.09.1997 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அந்த கிரய பத்திரம் குறியீடு செய்யப்படவில்லை. அதனுடைய நகல் வழக்கு கோப்பில் உள்ளது. அந்த வழக்கு ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும் போது அலமேலு 01.09.1997 அன்று சொத்தை வாங்கியுள்ளார் என்பது தெரியவருகிறது. வாதி தரப்பில் வாதி 1-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் கூடுதல் சாட்சியாக வா.சா.2 ராமு என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய முதன்மை சாட்சியத்தில் "***வழக்கு சொத்தை அலமேலு அனுபவித்து வந்த வா.த.சா.ஆ.1 உயில் சாசனம் வாதி பெயருக்கு எழுதி வைத்த பிறகு அலமேலு அனுபவித்து வருவதாகவும், பிரதிவாதி இறந்த அலமேலுவின் உறவினர் என்பதால் வழக்கு சொத்தில் உரிமை ஏற்பட்டதாக கூறி தடையும் இடைஞ்சலும் செய்ய முற்பட்டததாகவும், அதனால் வாதி கடந்த 2021-ம் ஆண்டு டிசம்பர் இறுதி வாரத்தில் உறவினர்கள் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் முன்னிலையில் வா.த.சா.ஆ-1-ஐ காண்பித்தும், பிரதிவாதிக்கு உண்மை நிலை தெரிந்தும் வாதி அனுபவத்தை தடை செய்து வருவதாகவும், வாதி தாக்கல்*** செய்துள்ள ***வழக்கு உண்மையான வழக்கு என்றும் கூறியுள்ளார்".***

9. வாதி வழக்கு சொத்து தனக்கு உரிமைப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கு வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி தரப்பில் வழக்கின் சம்மனை வாங்கிக்கொண்டு இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்துள்ளார். வா.த.சா.ஆ.1 உயில் ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும் போது அலமேலு அந்த ஆவணத்தில் தன்னுடைய இறப்பிற்கு பின்பு உயிலில் கண்டுள்ள சொத்தை வாதி ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியுள்ளார். அலமேலு இறந்து விட்டார் என்பதற்கு இறப்பு சான்றிதழை வாதி தரப்பில் குறியீடு செய்யவில்லை. ஆனால் வாதி வழக்குச் சொத்து தனக்கு உரிமைப்பட்டது என்று விளம்புகை செய்ய வா.த.சா.ஆ.1 ஆவணத்தை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளார். அந்த ஆவணம் ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணமாகும். வாதி தரப்பில் மற்றொரு சாட்சி விசாரிக்கப்பட்டுள்ளார். ஆனால் அவர் இந்த வழக்கின் 3-ம் தரப்பினர் ஆவார். வா.த.சா.ஆ.1 உயில் ஆவணத்திற்கு சாட்சி கையொப்பமிட்ட ஜெயக்குமார் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்கள் வழக்கில் விசாரிக்கப்படவில்லை. இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 68-ன்படி ஒரு உயில் ஆவணத்தை நிரூபிக்க வேண்டுமென்றால் அதில் சாட்சி கையொப்பம் இட்ட இரண்டு நபர்களில் ஒரு நபர் விசாரணை செய்யப்படவேண்டும். ஆனால் வாதி தரப்பில் இரு சாட்சிகளையும் விசாரணை செய்வதற்கு எந்த நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை.

10. வா.த.சா.ஆ.1 உயில் ஆவணமானது உயில் எழுதி வைத்த நபரின் இறப்பிற்கு பின்பு தான் அது செயல்பாட்டுக்கு வரும். அவர் தான் அந்த உயிலை அலமேலுவிற்கு எழுதி வைத்துள்ளார். அலமேலு இறந்துவிட்டார் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதியையேச் சாரும். அலமேலுவினுடைய இறப்பு சான்றிதழை தாக்கல் செய்து அதனை குறியீடு செய்ய வாதி தரப்பில் தவறிவிட்டார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் கீழ்கண்ட முன் தீர்ப்பில் உயில் ஆணவத்தில கண்டுள்ள சாட்சிகளைக் கொண்டு இறந்த நபரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் ஆகியவற்றை நிரூபிக்க வேண்டுமென்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**L.Bakthavatsalam & Ors.V.R. Alagiriswamy (deceased by Lrs) & Ors., AIR 2008 (NOC) 733 (Mad.).**

Credibility of attesting witness:-

Section 68 of Indian Evidence Act applies to cases where the attesting witnesses are alive and Section 69 applies to cases where no attesting witnesses are alive. But the question to be considered in these cases is that even if section 69 is applicable, it must be proved that the attestation of one of the attesting witnesses at least is in the handwriting and that the signature of the person executing the document is proved to be in his handwriting. In the absence of original Will produced before the court and in the absence of any such evidence as required under section 69 of the Indian Evidence Act, except the evidence of the attesting witness Venkatasamy Naidu in Section 145 Cr.P.C. proceedings which was marked as Ex.B.7, it is patently clear that there is no compliance of the requirements under Section 68 or 69 of the Indian Evidence Act on the facts of the present case. While so, it is not known as to how it is relevant to consider the credibility of the attesting witness, when the requirement of law in respect of proof of execution of the Will requires the evidence of attesting witness to show that the Testator was in a sound state of mine and the Testator has been the attesting witnesses, who have signed in the presence of the Testator as required under Section 63 (c) of the Indian Succession Act and not the credibility of the attesting witnesses.

11. மேலும், அலமேலுவினுடைய இறப்பு சான்றிதழின் ஒரு நகல் ஆவணம் மட்டும் தான் வழக்குக் கோப்பில் காணப்படுகிறது. அது படிப்பதற்கு ஏதுவாக இல்லாமல்

அதிலிருந்து விவரங்களான பெயர், கணவர் பெயர், இறந்த தேதி, முகவரி போன்ற விவரங்கள் எதுவுமே அதில் தெளிவாக இல்லை.

12. ஆகையால் வாதி வா.த.சா.ஆ.1 உயில் ஆவணத்தை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 68-ன் படி நிரூபிக்கப்படவில்லை. மேலும் வாதி தரப்பில் உயிர் எழுதி வைத்த நபர் இறந்துவிட்டார் என்பதை நிரூபிக்க வில்லை. ஆகையால் வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரமும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**13.** முடிவாக**,** ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் நேரடியாக பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 10-ம் நாள் இத்திறந்தவெளி நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

G CHRISTIAN Digitally signed by G CHRISTIAN Date: 2026.07.10 19:27:40 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திண்டிவனம்.

**1.** வாதி தரப்பு சாட்சிகள்

வா.சா.1 - கலைவாணி (1-ம் வாதி)
வா.சா.2 - ராமு (3-ம் தரப்பினர்)

**2.** வாதி தரப்பு சான்றாவணங்கள்

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 1 | 06.08.2019 | அலமேலு என்பவர் வாதி கலைவாணிக்கு எழுதிக்கொடுத்த உயில்சாசன ஆவணம். | -சான்றிட்ட நகல் |

3. பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**:-** இல்லை.

G CHRISTIAN Digitally signed by G CHRISTIAN Date: 2026.07.10 19:27:46 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திண்டிவனம்.

வரைவு/சீரான தீர்ப்புரை
அ.வ.எண். 67/2022
தேதி:10.07.2026